TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 -OCT 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1970 ஏப்ரல் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-12 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு ஜி. ஆர். எட்மண்ட்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 22-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 22-வது பிரிவின் கீழ், கேள்வி நேரத்தை நிறுத்தி வைத்துவிட்டு, மற்ற இனங்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்கிற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) விதி 23 (1)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளின் 23 (1)-வது விதியைத் தள்ளிவைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்கிற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(2) நடை முறைக் கேள்வி

பேரவை தாமதமாகக் கூடியது குறித்து

THIRU T. MARTIN : Sir, on a point of order. In the Agenda for today, we find the ' List of Business for the meeting of the Assembly to be held in the Legislative Assembly Chamber, Fort St. George, Madras, at 9-00 A.M. on Thursday, the 9th April 1970. But, to-day the Hon. Deputy Speaker has come and the business for the day has commenced at about 9·15 A.M. Sir, may I know the reason for this delay from the Hon. Deputy Speaker ?

MR. DEPUTY SPEAKER : It is due to want of quorum.